3. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர் திரு. என். மருதாசலம் விடுதலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. நிலப்பறிக் கிளர்ச்சியையொட்டி 8—8—1970 அன்று கைது செய்யப்பட்டு கோயம்புத்தூர் மையச் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த பேரூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. என். மருதாசலம் அவர்கள் 1—9—1970 அன்று விடுவிக்கப்பட்டிருப்பதாகக் கோயம் புத்தூர் கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேடிடமிருந்து தகவல் வந்திருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றோர் அறிவிப்பு. தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) திருத்த மசோதா (சட்டப் பேரவை எண் 18/70) சட்ட மன்ற மேலவையில் 29—8—1970 அன்று ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்டு, திருத்தமேதுமின்றி, நிறைவேறியதாக சட்ட மன்ற மேலவை தலைவரிடமிருந்து அறிக்கை வந்துள்ளது.

(4) கவன ஈர்ப்பு.

(அ) சென்னை நகரில் போதிய போக்குவரத்து பேருந்துகள் விடப் படாமையால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகள்.

Dr. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Works to an urgent matter of public importance namely the inconvenience caused to the travelling public due to inadequacy of State Transport Buses in the City of Madras and the need to introduce more bhses especially during peak hours and relieve the hardship caused to the public.

திரு. என். எஸ். வி. சித்தன் : சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் "சென்னை மாநகரத்தில் அரசு போக்கு வரத்து பேருந்துகள் தேவையான அளவிற்கு இல்லாத காரணத்தினால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுப் பற்றியும் குறிப்பாக நெரிசல் நேரங்களில் அதிகப் பேருந்துகளை விடுவதன் மூலம் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை நீக்க வேண்டிய அவசியம் பற்றி"யுமான அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

Thiru GOMATHISANKARA DIKSHITHAR : Sir, I call the attention of the Hon. Minister for Public Works to an urgent matter of public importance, namely the inconvenience caused to the travelling public due to inadequacy of State Transport Buses in the City of Madras and the need to introduce more buses especially during peak hours and relieve the hardship caused to the public.